பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**07 07 2026 TUESDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) இந்தியா — இந்தோனேஷியா இடையே பாதுகாப்பு, வேளாண்மை, உள்ளிட்ட துறைகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் எட்டு ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

2) அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தில் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்று பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி வலியுறுத்தியுள்ளார்.

3) டாஸ்மாக் ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதல் 25 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

4) தமிழகத்தில் அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படாததால், ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

5) இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3-ஆவது ட்வெண்ட்டி - ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

- - இனி விரிவான செய்திகள் —

<<<<<<>>>>>>

இந்தியா — இந்தோனேஷியா இடையே பாதுகாப்பு, வேளாண்மை, அரியவகை கனிமங்கள், எஃகு, கடல்சார் பொருளாதாரம், வளர்ந்து வரும் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் எட்டு முக்கிய ஒப்பந்தங்கள் இன்று கையெழுத்தாயின.

ஜகார்தாவில் இன்று இந்தோனேஷிய அதிபர் திரு **Prabowo Subianto,** பிரதமர் திரு நரேந்திர மோடி இடையே ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்குபின் இரு தலைவர்கள் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

இந்திய மேலாண்மை கல்விக்கழகத்தின் கிளையை ஜகார்தாவில் அமைப்பதற்கும் இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

உற்பத்தி, உணவு பாதுகாப்பு மற்றும் மின்னணு தொழில்நுட்பத்தில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும் இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

ஒப்பந்தங்கள் கையெழுத்தானபின் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசிய அதிபர் திரு **Prabowo Subianto,** இந்தியா தங்களின் நம்பிக்கை மிகுந்த நட்பு நாடு என்றும், பல்வேறு துறைகளிலும் ஒத்துழைப்பை விரிவுபடுத்த மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பசுமை பரப்பை அதிகரித்து, தூய்மையான இந்தியாவை உருவாக்க மாணவர்கள் உறுதியேற்க வேண்டும் என்று மத்திய பெட்ரோலியத்துறை இணையமைச்சர் திரு சுரேஷ் கோபி வலியுறுத்தியுள்ளார்.

கோவை ஸ்ரீ ராமகிருஷ்ணா கலை அறிவியல் கல்லூரியில் தூய்மை இயக்க இந்தியா நிகழ்ச்சியில் பங்கேற்ற அவர், அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் இயக்கத்தில் அனைவரும் ஆர்வமுடன் பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கு இலவச மரக்கன்றுகளையும் அவர் வழங்கினார்.

அதிக அளவு கார்பன் வெளியேற்றத்தால் சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருவதாகவும், இதனை கட்டுப்படுத்த அதிக அளவில் மரங்களை வளர்க்க வேண்டியது அவசியம் என்றும் திரு சுரேஷ் கோபி கூறினார்.

<<<<<<>>>>>>

டாஸ்மாக் ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதல் 25 சதவீத ஊதிய உயர்வு வழங்கப்படும் என்று மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

இன்று சென்னை தலைமைச்செயலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், எம் ஆர் பி விலையிலேயே மதுபானங்கள் விற்பனை

செய்யப்பட வேண்டும் என்றும், கூடுதலாக பத்து ரூபாய் வசூலிக்கும் ஊழியர்கள் பணியிடை நீக்கம் செய்யப்படுவதாகவும் கூறினார்.

***(Sound Byte — விக்னேஷ் - 50 Sec. )***

மதுபான பார்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட மாட்டாது என்றும், மதுபானங்களின் விலை உயர்த்தப்படாது என்றும் திரு விக்னேஷ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

இணைய வழியில் ஆவணங்களை சமர்ப்பித்து பத்திரப்பதிவு செய்யும் நடைமுறை அடுத்த மாதம் 17-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருவதாக மாநில வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் திரு லோகேஷ் தமிழ்செல்வன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று தமது துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் இதை தெரிவித்த அவர், வீட்டுமனைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் ஆகியவற்றின் முதல் விற்பனைக்கு **AnyWhere Registration** என்ற நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்த புதிய நடைமுறையை கொண்டுவருவதற்கான வழிமுறைகள் குறித்தும், தொழில்நுட்ப கட்டமைப்பை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் அதிகாரிகளிடையே அவர் ஆலோசனை நடத்தினார்.

இந்த புதிய நடைமுறை மூலம் பொதுமக்கள் தங்களுக்கு வசதியான நேரத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

இதனால், அலுவலகங்களில் கூட்ட நெரிசல் கணிசமாக குறையும் என்றும், அலுவலகங்களுக்கு இடையேயான பணிச்சுமை சமநிலைப் படுத்தப்பட்டு பத்திரப்பதிவுகள் விரைவாக நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

பத்திரப்பதிவுக்காக பொதுமக்கள் அலுவலகங்களில் காத்திருக்க வேண்டிய நிலை மாறும் என்றும் திரு லோகேஷ் தமிழ்செல்வன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் உள்ள கீழமை நீதிமன்றங்களில் அரசு வழக்கறிஞர்கள் இல்லாததால் வழக்கு விசாரணை பாதிக்கப்படுவதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்படுவதற்கு தாமதம் ஏற்படும் சூழ்நிலையில், இதற்கான மாற்று ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தவெக அரசு பொறுப்பேற்று இரண்டு மாதங்கள் கடந்த பிறகும் அரசு வழக்கறிஞர்கள் முழுமையாக நியமிக்கப்படாததால் கீழமை நீதிமன்றங்களில் நூற்றுக்கணக்கான வழக்குகள் தேக்கமடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அரசு வழக்கறிஞர்களை மட்டுமே நம்பியிருக்கும் ஏழை எளிய மக்களின் சட்டப்பாதுகாப்பிற்கு முதலமைச்சர் பொறுப்பேற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், நீலகிரி மாவட்டத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

இன்று உதகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் ஆறு உள்ளிட்ட நீர்நிலைகளில் குளிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

***(Sound Byte — ஆட்சியர் — 50 Sec. )***

<<<<<<>>>>>>

தமிழகத்தையொட்டியுள்ள மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 32 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

காஞ்சிபுரம் மாவட்டம் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர்களுக்கான நேரடி சேர்க்கை வரும் 31-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி .திவ்யஸ்ரீ தெரிவித்துள்ளார்

-------------------

மதுரையில் போக்குவரத்து துணை ஆணையாளர் வனிதா தலைமையில் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் இன்று நடைபெற்றது

------------

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் கெலவரப்பள்ளி அணை பகுதியில் தென்பெண்ணை ஆற்றில் ரசாயன கழிவுநீர் நுரைகள் செல்லும் இடங்களில் மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டாக்டர் ராஜூவ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

---------------

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 559 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் ஒரு பகுதியாக, நீர் உந்து நிலையத்தை மதுரை மாவட்ட ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று பார்வையிட்டார்.

----------------

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கூட்டரங்கில் இன்று காலை மாவட்ட வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்கூட்டம் ஆட்சியர் ஷரண்யா Ari முன்னிலையில் நடைபெற்றது

<<<<<<>>>>>>

***விளையாட்டுச் செய்திகள்***

**இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 3வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.**

**Nottingham-ல் இப்போட்டி இரவு 10 மணிக்கு தொடங்குகிறது**

**<<<<<<END>>>>>>**